2. விதி 110–ன்கீழ் அறிக்கை

சுனாமி நிவாரணத்திற்கு மத்திய அரசு தொகை விடுவித்துள்ளது பற்றி மாண்புமிகு நிதி அமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவை விதி 110-ன்கீழ் மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் அறிக்கை ஒன்றினை அளிக்க அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதி அளிக்கிறேன்.*

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2004 ஆம் ஆண்டு...(குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நிதி அமைச்சர் படித்துக் கொண்டிருக்கிறார். (குறுக்கீடு) படிக்க ஆரம்பித்திருக்கிறார். படித்து முடிக்கட்டும்.*

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: *டிசம்பர் திங்கள் 26 ஆம் நாள் அன்று சுனாமி ஆட்கொல்லிப் பேரலைகள், எவ்வித முன்னெச்சரிக்கையும் இன்றி, தமிழ்நாட்டு கடற்கரையோரப் பகுதிகளைத் தாக்கின. இது முன்னெப்போதும் கண்டிராத வகையிலான பேரிடராகும். 8,018 நபர்களின் உயிர்களைப் பறித்து, இலட்சக்கணக்கான மக்களை உறைவிடமிழக்கச் செய்து, கடற்கரைப் பகுதிகளிலுள்ள மீனவர்கள் மற்றும் ஏனைய மக்களின் வாழ்வாதாரங்களைச் சேதப்படுத்திச் சிதைத்த இப்பேரலைகள் கடற்கரையோரம் நெடுகிலும் அளப்பரிய பேரழிவை ஏற்படுத்தின.*

மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களினுடைய ஆணைப்படி தமிழக அரசின் அனைத்துத் துறைகளும் நிவாரணப் பணிகளை உடனடியாக மேற்கொள்ள முடுக்கி விடப்பட்டன. சுனாமி பேரலைகளினால் ஏற்பட்ட பேரழிவு மற்றும் சேதங்களை விவரித்து, நிவாரணம் மற்றும் மறுவாழ்வுப் பணிகளுக்காக, மத்திய அரசிடமிருந்து 4,800 கோடி ரூபாய் நிதியுதவி கோரி, இந்த அரசு விரிவான கோரிக்கை மனு ஒன்றை அளித்தது. அத்துடன், மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள், 5,000 கோடி ரூபாய் செலவில், கடலோர பசுமைத் தடுப்புகள், மாங்கிரோவ் காடுகள், கருங்கற்களாலான கடற்தடுப்புச் சுவர்கள் மற்றும் கான்கிரீட் கடற்தடுப்புச் சுவர்கள் ஆகியவற்றை அமைப்பது உள்ளடக்கிய கடலோரப் பாதுகாப்புத் திட்டமொன்றைச் செயற்படுத்த வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டுள்ளார்.

2005 மார்ச் 7] [திரு. சி. பொன்னையன்]

2-3-2005 அன்று நான் சட்டப் பேரவையில் 2005-2006 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையை அளித்து ஆற்றிய உரையில், இதுவரையில் மத்திய அரசு 31-1-2005 ஆம் நாளிட்ட அனுமதி ஆணை ஒன்றின் மூலமாகவும், 24-2-2005 ஆம் நாளிட்ட மற்றொரு ஆணையின் மூலமாகவும், மாநில அரசுக்கு 1,726.72 கோடி ரூபாய் அனுமதித்துள்ளது என்றும், முன் பணமாக 250 கோடி ரூபாய் மட்டுமே வழங்கப்பட்டதைத் தவிர, இதுவரையிலும் மாநில அரசுக்கு வேறு நிதி ஏதும் விடுவிக்கப்படவில்லை என்றும் கூறியிருந்தேன். அதன் தொடர்ச்சியாக, 4-3-2005 அன்று சட்டமன்றத்தில் நடைபெற்ற நிதிநிலை அறிக்கையின் மீதான விவாதத்தின்போது இது குறித்த பிரச்சினை எழுப்பப்பட்டது. அப்போது, மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மைய அரசு அனுமதித்த தொகையை இதுவரை மத்திய நிதி அமைச்சகம் இன்னும் விடுவிக்கவில்லை என்று எடுத்துரைத்தார். அப்போது சுனாமி பேரலைத் தாக்குதல் ஏற்பட்டு 2 மாதங்களுக்கு மேல் ஆன நிலையிலும், மத்திய அரசிடமிருந்து முன் பணம் தவிர, 31-1-2005 மற்றும் 24-2-2005 அன்று வெளியிடப்பட்டுள்ள ஆணைகளின்படி பணம் ஏதும் மத்திய அரசு விடுவிக்கவில்லை என்பது தெளிவாக்கப்பட்டது. குறிப்பாக, மத்திய நிதி அமைச்சகம் ஏன் இப்படி தாமதப்படுத்தி வருகிறது என்று சட்டமன்றத்தில் 4-3-2005 அன்று விவாதிக்கப்பட்டது. மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மிக விளக்கமாகவும், தெளிவாகவும், மத்திய நிதி அமைச்சகம் ஏன் இந்த நிலையை எடுக்கின்றது என்றும், மாநில அரசுக்கு வழங்க வேண்டிய நிதியை ஏன் வழங்கவில்லை என்றும் ஆணித்தரமாக வினா எழுப்பினார்கள்.

மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சட்டமன்றத்தின் வாயிலாக உறுதியுடனும், திடமாகவும் இந்தக் கோரிக்கையை வலியுறுத்தியதன் விளைவாக, தற்போது அவசர அவசரமாக மத்திய அரசு 367.20 கோடி ரூபாய் நிதியை மாநில அரசுக்கு விடுவித்துள்ளது என்பதை இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்ள விழைகின்றேன். மத்திய அரசு 367.20 கோடி ரூபாய் நிதியை மாநில அரசுக்கு விடுவித்துள்ளது என்றும், இது மாநில அரசின் கணக்கில் சேர்க்கப்பட்டுள்ளது என்றும் 5-3-2005 அன்று பாரத ரிசர்வ் வங்கியிடமிருந்து தகவல் பெறப்பட்டுள்ளது என்பதை இம்மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்கிறேன். தற்போது விடுவிக்கப்பட்டுள்ள இந்த 367.20 கோடி ரூபாயையும், முன் பணமாக ஏற்கெனவே விடுவிக்கப்பட்ட 250 கோடி ரூபாயையும் சேர்த்து மொத்தம் 617.20 கோடி ரூபாய் மத்திய

அரசால் உடனடி நிவாரணம் (Relief and Response) என்ற தலைப்பின்கீழ் மட்டும்தான் வழங்கப்பட்டுள்ளது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11-0.5

சுனாமி பேரலையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உரிய நிவாரணம் பெற்றுத் தருவதிலும், நிவாரணப் பணிகளை முழுமையாக நிறைவேற்றுவதிலும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எப்பொழுதுமே முனைப்பாகச் செயல்படுகிறார்கள் என்பதை இந்த மாமன்ற உறுப்பினர்கள் அனைவரும் அறிவார்கள். (மேசையைத் தட்டும் ஒலி). எனவே, இது மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்குக் கிடைத்த வெற்றி என்பதைத் தெரிவித்துக்கொண்டு, அமைகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)

3. தகவல் கோரல்

பேரவை விதி 224-ன்படி ஏற்கெனவே அனுமதி மறுக்கப்பட்ட ஒரு பிரச்சினையை அவையில் எழுப்புதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: என்ன புகழேந்தி, சொல்லுங்கள்.

திரு. இ. புகழேந்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,**

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் பேசியது எதுவும் அவைக் குறிப்பில் ஏறாது. அனுமதி ஏற்கெனவே மறுக்கப்பட்டிருக்கிறது. (குறுக்கீடுகள்) தாங்கள் பேசியது எதுவும் அவைக் குறிப்பிலே ஏறாது. ஏற்கெனவே அனுமதி மறுக்கப்பட்டு, உங்களிடத்திலே கையெழுத்து வாங்கப்பட்டிருக்கிறது. அதை எழுப்புவதற்கு இப்போது இடமில்லை. அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. திரு. கோவை தங்கம் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. கோவை தங்கம். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். அனுமதி மறுக்கப்பட்டிருக்கிறது. அனுமதி மறுப்பதற்கு பேரவைத் தலைவருக்கு முழு உரிமையும் உண்டு. பேரவை விதி

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.